| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| முனைவர்.மு.பழனிச்சாமி,<br>இயக்குநர் (மு.கூ.பொ.),<br>அரசுத் தேர்வுகள் இயக்ககம்,<br>சென்னை – 600 006. | அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,<br>இணைஇயக்குநர் (கல்வி),<br>புதுச்சேரி. |

ந.க.எண். 127311/எச்1/2019 நாள் : 16.07. 2020

ஐயா/அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை-6 – மேல்நிலை பொதுத்தேர்வுகள், மார்ச் 2020 – இணையதளம் வாயிலாக மதிப்பெண் பட்டியல் (Statement of Marks) விநியோகித்தல் – தொடர்பாக.

பார்வை: அரசாணை (நிலை ) எண்.53, பள்ளிக்கல்வி (ஜிஇ1) துறை, நாள் 11.03.2015.

-----

மார்ச் 2020, மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வெழுதிய தேர்வர்களின் தேர்வு முடிவுகள் மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வில் தேர்ச்சி பெறாத பாடங்களை (+1 arrear subjects) மார்ச் 2020 பருவத்தில் எழுதிய தேர்வர்களின் தேர்வு முடிவுகள் ஆகியவை, **16.07.2020** அன்று காலை வெளியிடப்படுகிறது.

மேற்குறிப்பிட்டவாறு, தேர்வு முடிவுகள் வெளியிட்ட பின்னர், அரசுத் தேர்வுகள் இயக்ககம் அறிவிக்கும் நாட்களில் **www.dge.tn.gov.in** என்ற இணையதள முகவரியிலிருந்து அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் / தனித்தேர்வர் தேர்வுமைய பள்ளித் தலைமையாசிரியர்கள், தங்களது பள்ளியில் / தேர்வு மையத்தில், மார்ச் 2020 மேல்நிலை இரண்டாம் ஆண்டு மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வில் தேர்ச்சி பெறாத பாடங்களை மார்ச் 2020 பருவத்தில் தேர்வு எழுதிய தேர்வர்களுக்கு மதிப்பெண் பட்டியல்களை (Statement of Marks) தங்களுக்கு வழங்கப்பட்ட USER ID, PASSWORD-ஐக் கொண்டு பதிவிறக்கம் செய்து அம்மதிப்பெண் பட்டியல்களில் உள்ள விவரங்களை சரிபார்த்து, பள்ளி தலைமையாசிரியரின் கையொப்பம் மற்றும் பள்ளி முத்திரையிட்டு தயாராக வைத்துக் கொள்ள வேண்டும்.

மேற்படி, மதிப்பெண் பட்டியல்களை (Statement of Marks) அரசுத் தேர்வுகள் இயக்ககம் அறிவிக்கும் நாள் முதல் பள்ளித் தேர்வர்கள் / தனித் தேர்வர்களுக்கு சம்பந்தப்பட்ட பள்ளிகள் / தனித்தேர்வர் தேர்வு மையம் மூலமாக விநியோகம் செய்யப்படவேண்டும்.

பள்ளித் தேர்வர்கள் / தனித்தேர்வர்கள் தேவைப்படின் அவரவர்களே நேரடியாக மதிப்பெண் பட்டியல்களை (Statement of Marks) **http:// www.dge.tn.gov.in** என்ற இணையதள முகவரியிலிருந்து அரசுத் தேர்வுகள் இயக்ககம் அறிவிக்கும் நாட்களில் பதிவிறக்கம் செய்து கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேர்வர்கள் அவர்களுக்கு வழங்கப்படும் மதிப்பெண் பட்டியல்களை (Statement of Marks) கல்லூரிச் சேர்க்கைக்கும் மற்றும் அவசரத்தேவைக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். பின்னர் மேல்நிலைத் தேர்வு மதிப்பெண் சான்றிதழ்கள் (Mark Certificate)அச்சமுழுத்தம் செய்து பள்ளிக்கு விநியோகிக்கப்படும்.

**<u>கூடுதல் அறிவுரைகள்:–</u>**

1. பள்ளித் தலைமை ஆசிரியர்கள் பதிவிறக்கம் செய்யப்படும் மதிப்பெண் பட்டியல்களை (Statement of Marks) சரிபார்த்து, அவற்றில் தலைப்பெழுத்து, பிறந்த தேதி, பெயர் ஆகியவற்றில் ஏதேனும் பிழைகள் இருப்பின், தலைமையாசிரியரே அத்திருத்தத்தை மேற்கொண்டு சான்றொப்பம் இட்டு அளித்திட வேண்டும்.

2. தேர்வர்களுக்கு மாற்றுச் சான்றிதழ் வழங்கும் போது மாற்றுச் சான்றிதழில் மேல்நிலை மதிப்பெண் சான்றிதழ் வரிசை எண்ணை எழுதும் கலத்தில் “Refer Original Certificate” என்று குறிப்பிட்டு தேர்வர்களுக்கு வழங்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

3. அசல் மதிப்பெண் சான்றிதழ்கள் அச்சமுழுத்தம் செய்து பெறப்பட்ட பின்னர், சம்பந்தப்பட்ட தேர்வருக்கான பள்ளியின் வசமுள்ள மாற்றுச் சான்றிதழ் பதிவேட்டின் Counter Foil–ல் சம்பந்தப்பட்ட தேர்வரது மேல்நிலை மதிப்பெண் சான்றிதழின் வரிசை எண்ணை, பதிவு செய்து கொள்ள வேண்டும். மேற்படி Counter Foil–ல் மேற்கொள்ளப்படும் பதிவுகள் நிரந்தரமாக பின்வரும் காலத்தில் சரிபார்த்தலுக்காகப் பயன்படுத்தக்கூடிய வகையில் பராமரிக்கப்பட வேண்டும்.

ஒம்/–
இயக்குநர்

**<u>நகல்:</u>**

1. தொழில் நுட்ப இயக்குநர், NIC, சென்னை
2. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
3. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
4. எப்1 பிரிவு (அலுவலகம்)